பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

01 10 2024 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஜமைக்கா பிரதமர் திரு. **Andrew Holness** உடன் இன்று தில்லியில் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுகள் நடத்துகிறார்.

2. நகர்ப்புறங்களில் வசிக்கும் ஒரு கோடி நலிந்த மற்றும் நடுத்தர குடும்பங்களுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் வீடுகள் கட்டித் தரப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

3. தமிழகத்தில் சுய உதவிக் குழுக்களுக்கு நடப்பாண்டு 35 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. அதிகம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளதாக மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் தெரிவித்துள்ளது.
5. தெற்காசிய இளையோர் கால்பந்து சாம்பியன் பட்டத்தை இந்தியா வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லி வந்துள்ள ஜமைக்கா பிரதமர் திரு. **Andrew Holness** உடன் இன்று இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுகள் நடத்துகிறார்.

இந்த பேச்சுகளின் முடிவில் இரு நாடுகளுக்கு இடையே பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமராக பொறுப்பேற்ற பிறகு முதல் முறையாக இந்தியா வந்துள்ள ஜமைக்கா பிரதமர், புதுதில்லியில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் ஆகியோரையும் சந்தித்துப் பேச உள்ளார்.

தனது நான்கு நாள் பயணத்தின்போது தில்லியில் தொழில் மற்றும் வர்த்தக சபை பிரதிநிதிகளையும் அவர் சந்தித்துப் பேச உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நாளை திரு. **Andrew Holness** வாரணாசி செல்ல உள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பொறுப்பேற்று முதல் 100 நாட்களுக்குள் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற கட்டமைப்புகளை மேம்படுத்த முக்கியமான நடவடிக்கை எடுத்துள்ளதாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. மனோகர்லால் கட்டார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நகர்ப்புற பகுதிகளில் வசிக்கும் நலிந்த பிரிவினருக்கு வீடு கட்டுவதற்கான பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டத்திற்கு மத்திய அரசு இந்த கால கட்டத்தில் அனுமதி அளித்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நகர்ப்புறங்களில் வசிக்கும் ஒரு கோடி நலிந்த மற்றும் நடுத்தர குடும்பங்களுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் வீடுகள் கட்டித் தரப்படும் என்றும் அவர் கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் மெட்ரோ ரயில் சேவை 21 நகரங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்றும், நாடு முழுவதும் தற்போது 700 கிலோ மீட்டர் நீளத்திற்கு மெட்ரோ ரயில் சேவை நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

ஜம்மு காஷ்மீரில் மூன்றாவது மற்றும் இறுதிகட்ட வாக்குப்பதிவு இன்று நடைபெறுகிறது.

ஏழு மாவட்டங்களில் உள்ள 40 தொகுதிகளில் வாக்குப்பதிவிற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

39 லட்சத்து 18 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

இதற்காக 5 ஆயிரத்து 60 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

கடைசி கட்ட தேர்தலில் 415 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

மூன்று கட்ட தேர்தல்களில் பதிவான வாக்குகள் வரும் 8ஆம் தேதி எண்ணப்பட்டு, அன்றே முடிவுகள் அறிவிக்கப்படும்.

<<<<>>>>

கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு வழங்கப்படும் உயிர்காக்கும் மருத்துவ சாதனங்களின் உதவியை திரும்பப் பெறுவதற்கான நிபந்தனைகள் தொடர்பாக வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

உயிர்பிழைக்க முடியாத அல்லது குணப்படுத்த முடியாத நிலையில் மரணத்தை எதிர்நோக்கி உள்ள நோயாளிகளுக்கு இந்த நெறிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மூளையில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டு 72 மணி நேரத்திற்குப் பிறகும் சிகிச்சையில் பலனளிக்காத நோயாளிகள் இந்தப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிர்காக்கும் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நோயாளிகளுக்கு உயிர்காக்கும் மருத்துவ சாதனங்களின் உதவியுடன் சிகிச்சை அளித்தாலும் அவர்கள் உயிர்பிழைக்க வாய்ப்பில்லை என்ற நிலையில் உயிர்காக்கும் சாதனங்களை திரும்பப் பெறுதல் குறித்து பரிசீலிக்கப்படும் என்று வரைவு வழிகாட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பொதுமக்களிடம் மத்திய சுகாதார அமைச்சகம் கருத்து கேட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் சுய உதவிக் குழுக்களுக்கு நடப்பாண்டு 35 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் சிறந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மணிமேகலை விருதுகளை வழங்கிப் பேசிய அவர், கடந்த ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்கு 30 ஆயிரத்து 74 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டதாகக் கூறினார்.

பெண்கள் விளையாட்டுத்துறையில் மட்டுமல்ல தொழில் துறையிலும் அதிக அளவில் சாதனை படைக்க வேண்டும் என்பதற்காக மாநில அரசு அனைத்து வகையிலும் அவர்களுக்கு உதவி செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஓராண்டில் மாநிலத்தில் ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

2022-23ஆம் நிதியாண்டுக்கான தொழிற்சாலைகள் குறித்த வருடாந்திர மதிப்பீட்டு அறிக்கையை மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

அந்த வகையில் அதிகம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது.

மகராஷ்டிரா இரண்டாம் இடத்திலும், குஜராத் மூன்றாம் இடத்திலும் உள்ளன.

உத்தரப்பிரதேசம் மற்றும் கர்நாடக மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

இந்த 5 மாநிலங்கள் மட்டும் உற்பத்தி துறைசார்ந்த வேலைவாய்ப்பில் சுமார் 55 சதவீத பங்களிப்பை வழங்கியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தாமிரபரணி ஆற்றில் கழிவுநீர் கலக்கப்படுவது முற்றிலும் தடுக்கப்பட வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவை நேற்று விசாரித்த நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன், புகழேந்தி ஆகியோர் அடங்கிய அமர்வு, தாமிரபரணி ஆறு தொடக்கம் முதல் கடலில் கலக்கும் பகுதி வரை அதன் இருபுறமும் உள்ள உள்ளாட்சி நிர்வாகங்கள் ஆற்றில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கான திட்டங்கள் குறித்து தனித்தனியாக அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

தேவைப்படும் பட்சத்தில் தாமிரபரணி ஆற்றினை நேரில் வந்து ஆய்வு செய்வோம் என்று கூறிய நீதிபதிகள், வழக்கு விசாரணையை நாளை தினத்திற்கு ஒத்திவைத்தனர்.

<<<<>>>>

இந்திய விமானப்படை தினத்தையொட்டி சென்னையில் இம்மாதம் 6ஆம் தேதி மெரினா கடற்கரையில் போர் விமானங்களின் வான்சாகச நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

அதற்கு முன்னதாக பயிற்சி ஒத்திகை நடைபெற உள்ளதால் இன்றும், நாளையும், நாளை மறுநாளும், இம்மாதம் 5, 6, 7 ஆகிய தேதிகளிலும் விமான நிலையத்தில் விமானங்களின் புறப்பாடு மற்றும் வருகையில் சிறிது மாற்றம் இருக்கும் என்று விமான நிலைய இயக்குநர் திரு. தீபக் தெரிவித்துள்ளார்.

இன்று பிற்பகல் 1.45 மணி முதல் மாலை 3.15 மணி வரை விமான நிலையம் மூடப்படும் என்றும், நாளை முதல் இம்மாதம் 8ஆம் தேதி வரை இடையிடையே சில நேரம் விமான சேவையில் மாற்றம் இருக்கக்கூடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

பிரதமராக திரு நரேந்திர மோடி தொடர்ந்து மூன்றாவது முறையாக பதவியேற்ற முதல் 100 நாட்களில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்த சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சிக்கு, சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

மூத்த பத்திரிகையாளர் வெங்கடேஷ், ஊடகவியலாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியின் முதல் பகுதி இன்றிரவு மணி 9.15-க்கு ஒருங்கிணைந்த அலைவரிசையில் ஒலிபரப்பாகிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்

<<<<>>>>

மேற்குத்தொடர்ச்சி மலையில் முதுமலை புலிகள் காப்பகத்தில் நீண்ட நாட்களாக காணப்படாத பல்வேறு உயிரினங்களை வனத்துறையினர் கண்டுபிடித்துள்ளனர்.

புதிய உயிரினங்களை கணக்கெடுக்கும் பணி கடந்த மாதம் நடைபெற்றபோது இவை கண்டுபிடிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக மாநிலத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமானது வரையிலான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்களின் ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமானது வரையிலான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-----------

*இருவரிச் செய்திகள்*

மேற்காசியாவில் சமீபத்திய நிலைமைகள் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகுவுடன் நேற்று தொலைபேசியில் உரையாடினார்.

-----------

சர்வதேச முதியோர் தின நிகழ்ச்சி புதுதில்லியில் மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் தலைமையில் இன்று நடைபெறுகிறது.

-----------

தேசிய ஊட்டச்சத்து மாத விழாவினை முன்னிட்டு சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஊட்டச்த்து உணவுப் பொருட்கள் கண்காட்சி நேற்று நடைபெற்றது.

-----------

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் 'தூய்மையே சேவை' இயக்கத்தின் சார்பில் தூய்மைப் பணியாளர்களுக்கான மருத்துவ முகாம் நேற்று நடைபெற்றது.

-----------

திருப்பத்தூர் மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் பயனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திரு. தர்ப்பகராஜ் வழங்கினார்.

-----------

கொடைக்கானலுக்கு வரும் வாகனங்களுக்கு இ-பாஸ் பெற்று அனுமதிக்கும் நடைமுறையை மறு உத்தரவு வரும் வரை சென்னை உயர்நீதிமன்றம் நீட்டித்து உத்தரவிட்டுள்ளதாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

-----------

சத்தியமங்கலம் புலிகள் காப்பக வனப்பகுதியில் உள்ள பழமைவாய்ந்த கெஜலட்டி தர்காவில் நேற்று நடைபெற்ற சந்தனக்கூடு திருவிழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

-----------

சென்னையில் நாளை திருப்பதி திருக்குடை ஊர்வலம் நடைபெற உள்ளதை முன்னிட்டு பூக்கடை மற்றும் யானைக்கவுனி பகுதிகளில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை அறிவித்துள்ளது.

-----------

***விளையாட்டுச் செய்தி***

தெற்காசிய இளையோர் கால்பந்து சாம்பியன் பட்டத்தை இந்தியா வென்றது.

பூடானில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் நடப்புச் சாம்பியன் இந்தியா 2-0 என்ற கோல் கணக்கில் பங்களாதேஷை வென்றது.

இந்தியா தரப்பில் முகமது கைஃப், நஜ்முல் ஹூடா ஆகியோர் கோல் அடித்தனர்.

**<<<<The End>>>>**